செய்தி வெளியீடு எண் : 349 நாள்: 08.03.2022

# செய்தி வெளியீடு

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் உதவித் திட்ட அமைப்பாளர் மற்றும் திட்ட உதவியாளர் நிலை–I பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (8.3.2022) தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் காலியாகவுள்ள 15 உதவித் திட்ட அமைப்பாளர் மற்றும் 13 திட்ட உதவியாளர் நிலை–I பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டமைப்பினை எதிர்கால தேவை கருதி பெருகிவரும் மக்கள் தொகைகேற்ப வலுப்படுத்திடவும், திட்ட அனுமதிகளை உடனுக்குடன் வழங்கிடவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வாயிலாக தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் காலியாகவுள்ள தொழில்நுட்பப் பணியிடங்களான, 15 உதவித்திட்ட அமைப்பாளர் மற்றும் 13 திட்ட உதவியாளர் நிலை–I ஆகிய காலியிடங்களுக்கு மாநில அளவில் கணினி வழித் தேர்வு மற்றும் நேர்முக தேர்வு நடத்தப்பட்டு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 6 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் / சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. ஹித்தேஷ் குமார் எஸ். மக்வானா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு. அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., தலைமைச் செயல் அலுவலர் திருமதி எம். லக்ஷ்மி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

...........

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9